வாசிக்க: சங்கீதம் 67

***"தேவனே, எங்களுக்கு இரங்கி எங்களை ஆசீர்வதித்து, உமது திருமுகத்தை எங்கள்மேல் பிரகாசிக்கச் செய்யும்" (சங் 67:2)***

இந்நாட்களில் துதித்தலில் புதியதோர் ஆர்வம் உருவாகியுள்ளது. இப்பொருள் பற்றி ஆண்டுதோறும் பல புதிய நூல்களும் வெளிவருகின்றன. ஆனால் பெரும் பாலும் முடிவு "தன்னலத்திற்கான துதிதான்." சபையைப் பற்றியும் உலகைப் பற்றியும் கரிசனைகொள்வது யாரோ ? துதிப்பது நமது பிரச்னைகளிலிருந்து நாம் வெளி வரவும் நமது தேவைகளைப் பெற்றுக்கொள்ளவும் உதவுகிறது என்பது உண்மை தான். ஆனால் நாம் இந்தச் சிறுபிள்ளைத்தனத்திலிருந்து மேலெழுந்து, சபையின் ஆசீர்வாதத்திற்காக "சபையின் ஆண்டவரைத்" தொழுவோம்; உலகின் ஆசீர்வாதத் திற்காக "அறுவடையின் ஆண்டவரை" வேண்டுவோம்; விண்ணரசின் புதிய வெற்றி களுக்காக "சேனைகளின் ஆண்டவரைத்" துதித்துப் போற்றுவோம்.

பெந்தெகொஸ்தேக்குமுன் சீடர்கள் எதைத்தான் மனதில் வைத்துக் கடவுளைத் துதித்து ஆராதித்திருப்பார்களெனக் கற்பனைசெய்து பாருங்களேன். பெந்தெ கொஸ்தேக்குமுன் கிறிஸ்துவின் பரமேறுதலை அடுத்த பத்து நாட்களும் வேண் டலின் ஆவியும் போற்றலின் ஆவியும் சீடர்களை வெகுவாய்ப் பற்றியிருந்தது. பரமேறுதலை அடுத்து சீடர்கள் "மிகுந்த மகிழ்ச்சியோடு எருசலேமுக்குத் திரும்பி வந்து, நாள்தோறும் தேவாலயத்திலே கடவுளைப் புகழ்ந்து துதித்துக் கொண்டி ருந்தார்கள்" (லூக் 24:52,53).

எழுப்புதலுக்கான ஜெபம் என்றால் "ஆண்டவரே, எழுப்புதலை அனுப்பும்" என்பது மட்டுமல்ல. அது தற்பரிசோதனையையும் பாவ அறிக்கையையும் உள்ளடக்கியது. கர்த்தருக்குள் நிறைவேற்றாத பொருத்தனைகளையும் (பிர 5:3,4) பிறருக்கு விரோதமாகச் செய்தவற்றையும் (மத் 5:23,24) இறைவேண்டலில் நினைவுகூர வேண்டும். இவ்விதமான பலிகளில் கடவுள் பிரியப்படுவதால் நிச்சயமாகப் பலி பீடத்தில் அவரது அக்கினி இறங்கும் (சங் 51:17-19). தகர்ந்துகிடந்த கர்த்தரின் பலிபீடத்தை எலியா சீரமைத்தபோது வானிலிருந்து நெருப்பு இறங்கவில்லையா ? கடவுள் தம் மனிதரை உடைப்பதும் உருவாக்குவதும் முழங்காலில்தான். இயேசு ஜெபித்தபோது வானம் திறந்தது. ஆதிச்சபை ஜெபித்தபோது இடம் அசைந்தது. இகத்தை அசைக்கும் ஆவியின் வல்லமையை ஜெபம் அவிழ்த்துவிடுகிறது. எழுப்பு தலைக் குறித்துப் போதுமான அளவு பிரசங்கித்துவிட்டோம், எழுதிவிட்டோம்; ஆனால் போதுமான அளவு ஜெபிக்கவில்லையென்றே எண்ணுகிறேன். "எவ்வள வுக்கதிகமாய் எழுப்புதலுக்காக ஜெபிக்கிறோமோ அவ்வளவுக்கதிகமாய் எழுப்பு தலை வாஞ்சிப்போம்; எவ்வளவுக்கதிகமாய் எழுப்புதலை வாஞ்சிக்கிறோமோ அவ் வளவுக்கதிகமாய் எழுப்புதலுக்காக ஜெபிப்போம். இன்று எழுப்புதல் இல்லாததற்கு ஒரு முக்கிய காரணம் எழுப்புதல் இல்லாமல் வாழ நாம் கற்றுக்கொண்டதே" என்று புலம்பினார் எழுப்புதல் வீரர் லியோனார்டு ரேவன்ஹில் (1907-1994).

*திரித்துவமே எங்கள் திரு மாமறையே,*
*திரித்துவ தேவா, திருவருள் மூவா,*
*திருமுகம் தேடி திருவடி வந்தோம்;*
*திருமுகத் தரிசனம் திருப்பிடும் எம்மேல்! — மிஷனரி K. பொன்ராஜ் ஐசக்*